RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING — மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-3 | இதழ்-341 | 06 டிசம்பர் | வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## எல்லை தாண்டியதாக புகார்: தமிழக மீனவர்கள் 14 பேர் இலங்கை கடற்படையினரால் கைது

ராமேசுவரம், நவ.6



தமிழக மீனவர்களின் இரண்டு விசைப்படகுகளைக் கைப்பற்றி அதிலிருந்த 14 மீனவர்களை இலங்கை கடற்படையினர் வியாழக்கிழமை கைது செய்தனர்.

ராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து சுமார் 500 விசைப்படகுகளில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் புதன்கிழமை கடலுக்குச் சென்றனர். வியாழக்கிழமை அதிகாலை கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த பிரிட்டோ, மெஜோ ஆகியோருக்குச் சொந்தமான இரண்டு விசைப்படகுகளை எல்லை தாண்டிய குற்றச்சாட்டின் பேரில் இலங்கை கடற்படையினர் கைப்பற்றினர்.

தொடர்ந்து இரண்டு படகுகளிலிருந்து ரிபாக்சன், ராஜ பிரபு, அரவிந்த் , ராபின் ஸ்டன், முனீஸ்வரன், பிரசாந்த், ஆரோக்கியம், பெட்ரிக் நாதன், யோபு, ஜான் இம்மரசன், அருள் பிரிட்சன், நிஷாத், வினித், அந்தோணி லிஸ்பன் ஆகிய 14 மீனவர்கள் கைது செய்யய்பட்டு இலங்கை கடற்படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

முன்னதாக, கடந்த ஜனவரி மாதத்திலிருந்து தற்போது வரை 67 தமிழக மீனவர்களின் படகுகளை சிறைப்பிடித்து 529 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## மாநில திட்டக்குழு துணைத் தலைவராக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நியமனம்

சென்னை, டிச.6



மாநில திட்டக்குழுவின் அலுவல்சாரா துணைத் தலைவராக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினும், உறுப்பினராக தலைமைச்செயலர் நா.முருகானந்தமும் நியமிக்கப்பட்டுள்ளனர்.


தமிழக அரசின் மாநில திட்டக்குழுவின் தலைவராக முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளார். துணைத்தலைவராக பேராசிரியர் ஜெ.ஜெரஞ்சன், முழு நேர உறுப்பினராக ஆர்.சீனிவாசன், கூடுதல் முழு நேர உறுப்பினராக எம்.விஜயபாஸ்கர், பகுதிநேர உறுப்பினர்களாக சுல்தான் அகமது இஸ்மாயில், ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி கே.தீனபந்து, ஆயிரம் விளக்கு எம்எல்ஏ என்.எழிலன், மல்லிகா சீனிவாசன், ஜெ.அமலோற்பவநாதன், ஜி.சிவராமன், நர்த்தகி நடராஜ் ஆகியோரும் உள்ளனர்.

அலுவல்சாரா உறுப்பினர்களாக திட்டம், வளர்ச்சி, சிறப்பு முயற்சிகள் துறையின் செயலர் ரமேஷ் சந்த் மீனா, நிதித்துறை செயலர் டி.உதயசந்திரன் ஆகியோரும், உறுப்பினர் செயலராக ஐஎஃப்எஸ் அதிகாரி எஸ்.சுதாவும் உள்ளனர்.

இந்நிலையில், தமிழக அரசு மாநில திட்டக்குழுவுக்கு கூடுதலாக இருவரை நியமித்துள்ளது. அதாவது, திட்டம், வளர்ச்சி, சிறப்பு முயற்சிகள் துறையின் அமைச்சர் என்ற முறையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அலுவல்சாரா துணைத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இதையடுத்து, ஜெ.ஜெயரஞ்சன் செயல் துணைத்தலைவராகியுள்ளார். இதுதவிர, தமிழக தலைமைச்செயலர் நா.முருகானந்தம் அலுவல்சாரா உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவு தமிழக அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## 'மசூதியான கோயில்கள் வழக்குகளை விரைந்து விசாரிக்க வேண்டும்' மதுரா சர்வதேச இந்துக்கள் மாநாட்டில் தீர்மானம்

புதுடெல்லி, நவ.6



மசூதியான கோயில்கள் வழக்குகளை விரைந்து விசாரிக்க வேண்டும் என மதுராவின் சர்வதேச இந்துக்கள் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேசம் மதுராவில் உள்ள பிருந்தாவனில் சர்வதேச இந்துக்கள் மாநாடு நடந்து முடிந்துள்ளது. இங்குள்ள பாலாஜி மடத்தின் கோயிலில் நடைபெற்ற இந்த மாநாட்டில் நாடு முழுவதிலும் இருந்து பல இந்து அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர். வெளிநாடுகளில் உள்ள சில இந்து அமைப்புகளும் கலந்துகொண்டன. இதை இந்து ஜாக்ருதி சமிதி உள்ளிட்ட சில அமைப்புகள் முன்னிருந்து நடத்தின. இதன் முடிவில் சில முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மாநாட்டின் பொதுச்செயலாளரான சாரு தத்தா பிங்ளே தீர்மானங்களை வாசித்தார். அவை: "நாடு முழுவதிலும் உள்ள நீதிமன்றங்களின் மசூதியான கோயில் வழக்குகளை விரைந்து விசாரிக்க வேண்டும்.

குறிப்பாக வாரணாசியின் கியான்வாபி மசூதி மற்றும் மதுராவின் ஷாயி ஈத்கா மசூதி ஆகிய இரு வழக்குகளை விரைவு நீதிமன்றங்கள் அமைத்து முடிக்க வேண்டும். இந்திய ஒருமைப்பாட்டுக்கு இந்தியாவை இந்து நாடாக மாற்றுதுவது அவசியம்.

அமெரிக்காவின் ஆய்வு மையம், வரும் 2050ல் உலகின் அதிகமான முஸ்லிம்கள் நிறைந்த நாடாக இந்தியா மாறும் எனக் கண்டறிந்துள்ளது. வஃக்பு வாரியங்கள் மூலமாக நில ஜிஹாத் நடத்தப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும். ' என்பன. மேலும், காசி மதுரா வழக்குகளுக்காக நாடு முழுவதிலும் கையொப்பங்கள் பெறவும் இந்த மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வங்கதேசத்தின் இந்துக்களின் உரிமைகளை பாதுகாப்பதில் இந்திய அரசு தலையிடவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் மாமிசங்களுக்கான ஹலால் சான்றிதழ் முறையை தடை செய்யவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மதுராவின் இந்த மாநாட்டில் சர்வதேச அளவிலான 54 இந்து அமைப்புகளின் 120 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் முக்கிய துறவிகள் மற்றும் மடங்களின் அதிபர்களும் கலந்து கொண்டனர். பிரபல வழக்கறிஞர்கள், சில பத்திரிகைகளின் ஆசிரியர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.



இரண்டு நாள் பயணமாக இந்தியா வந்துள்ள பூடான் மன்னர் ஜிக்மே கேசர் நாம்கேல் வாங்சுக் மற்றும் ராணி ஜெட்சன் பெமா ஆகியோரை வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் வரவேற்றார். அவர்களுக்கு அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. பூடான் மன்னரின் வருகை குறித்த தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள ஜெய்சங்கர், "இன்று புதுடெல்லிக்கு வருகை தந்துள்ள பூட்டான் மன்னர் ஜிக்மே கேசர் நாம்கேல் வாங்சுக்கை வரவேற்பதில் பெருமை கொள்கிறேன். அவரது வருகை இரு நாடுகளுக்கு இடையேயான தனித்துவமான நட்பை மேலும் வலுப்படுத்தும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

## அதானி விவகாரம்: நாடாளுமன்ற வளாகத்தில் ராகுல் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்பிக்கள் நூதன ஆர்ப்பாட்டம்

புதுடெல்லி, நவ.6




அதானி விவகாரம் தொடர்பாக நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணைக்கு உத்தரவிட வலியுறுத்தி மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டோர் நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதானி கிரீன் நிறுவனம் மின்சார விநியோகத்துக்கான ஆர்டரை பெறுவதற்காக 4 மாநில அரசுகளுக்கு லஞ்சம் கொடுத்ததாக அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இதையடுத்து, இந்த விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றக் கூட்டுக் குழு விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்பதை காங்கிரஸ் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இந்நிலையில், நாடாளுமன்றக் குளிர்கால கூட்டத் தொடரின் 9ம் நாளான இன்று, நாடாளுமன்றத்துக்கு வந்த ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்பிக்கள், நாடாளுமன்ற வளாகத்தில் இந்த விவகாரத்தை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, அவர்கள் "மோடியும் அதானியும் ஒன்று" என பொறிக்கப்பட்ட ஆடையை அணிந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது பேசிய ராகுல் காந்தி, "அதானி மீது விசாரணை நடத்த பிரதமர் மோடி அனுமதிக்க மாட்டார். ஏனெனில், அதானி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டால் பிறகு தானும் விசாரணைக்கு உட்பட வேண்டியது இருக்கும் என்பது அவருக்குத் தெரியும்." என விமர்சித்தார்.

மக்களவைக்குள்ளும் எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டனர். அதானி விவகாரம், மணிப்பூர் வன்முறை, சம்பலுக்குச் செல்ல முயன்ற ராகுல் காந்தியை தடுத்து நிறுத்தியது உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விவாதிக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர்.

சபாநாயகர் ஓம் பிர்லா அதற்கு அனுமதி அளிக்கவில்லை. கேள்வி நேரம் முக்கியம் என்றும் திட்டமிட்ட ரீதியில் அவை நடைபெறும் என்றும் கூறி எதிர்க்கட்சி உறுப்பினர்களை அமைதி காக்குமாறு கேட்டுக்கொண்டார். இதையடுத்து, கேள்வி நேரம் தொடங்கி நடைபெற்றது.

நெடுஞ்சாலைத் துறை தொடர்பான ராஜஸ்தான் எம்பியின் கேள்விக்கு அமைச்சர் நிதின் கட்கரி பதில் அளித்தார். "புதிய விரைவுச் சாலையில் காணப்படும் குறைபாடுகள் ஒப்பந்ததாரர் மூலம் சரி செய்யப்பட்டு, மூன்று மாதங்களில் பணிகள் முடிக்கப்படும். தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். தவறு இழைத்தவர்கள் யாராக இருந்தாலும் நாங்கள் விடமாட்டோம்." என்று கூறினார்.

கேரளாவில் சாலை விபத்தில் ஐந்து மருத்துவ மாணவர்கள் உயிரிழந்தது குறித்து காங்கிரஸ் எம்பி கே.சி. வேணுகோபால் கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் அளித்த நிதின் கட்கரி, "எர்ணாகுளம் புறவழிச் சாலைக்கு ஏற்கனவே அனுமதி அளித்துள்ளோம். தேசிய நெடுஞ்சாலையில் நிகழ்ந்த விபத்து ஒரு கருப்பு புள்ளி. மக்கள் விதிகளை பின்பற்ற வேண்டும். இவ்விஷயத்தில் உரிய நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. நாங்கள் அபராதத்தை உயர்த்தியுள்ளோம்." என குறிப்பிட்டார்.

மாநிலங்களவையில் பூஜ்ஜிய நேரத்தில் பேசிய பாஜக எம்பி சுதன்ஷு திரிவேதி, அதானி விவகாரம், ஹிண்டன்பர்க் ரிசர்ச் அறிக்கை உள்ளிட்டவற்றைப் பயன்படுத்தி பாஜக ஆட்சியைக் குழிதோண்டிப் புதைக்க அந்நிய சக்திகள் முயல்வதாகக் குற்றம் சாட்டினார். சுதான்ஷு திரிவேதிக்கான நேரம் முடிந்துவிட்டதாகவும், ஆனால் அவைத் தலைவர் அவரை தொடர்ந்து பேச அனுமதித்ததாகவும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதற்கு பதில் அளித்த அவைத் தலைவர் ஜக்தீப் தன்கர் கூறுகிறார், "இது மிகவும் தீவிரமான பிரச்சினை மற்றும் அனைவரிடமிருந்தும் கருத்துகளைப் பெற வேண்டும் என்பதால் நான் நேரம் தருகிறேன். மிகப்பெரிய ஜனநாயக அரசை செயலிழக்கச் செய்வதை அனுமதிக்க முடியாது. நமது இறையாண்மைக்கு கேடு விளைவிக்கும், ஆபத்தான எந்த முயற்சியையும் எதிர்க்க இந்த சபை ஒன்றுபட வேண்டும். நான் சுதன்ஷு திரிவேதியை தொடர அனுமதிக்கிறேன்." என்று குறிப்பிட்டார். எனினும், எதிர்க்கட்சிகளின் தொடர் எதிர்ப்பு காரணமாக அவையை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைப்பதாக அறிவித்தார்.

## டிவி நிகழ்ச்சியில் அரசுக்கு கோரிக்கை வைத்த திண்டிவனம் மாணவி! நிறைவேற்றிய அமைச்சர்

விழுப்புரம், நவ.6



திண்டிவனம் அடுத்த அம்மணம்பாக்கம் கிராமத்தில் வசிக்கும் 8 ஆம் வகுப்பு மாணவி, தங்களின் கிராமத்துக்கு போக்குவரத்து வசதியினை ஏற்படுத்தித் தருமாறு அரசுக்கு கோரிக்கை வைத்திருந்த நிலையில், போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் அதை நிறைவேற்றியுள்ளார்.

திண்டிவனம் அடுத்த ஒலக்கூர் அம்மணம்பாக்கம் கிராமத்தை சேர்ந்த அரசு பள்ளியில் 8 ஆம் வகுப்பு படித்து வருகிறார் தர்ஷினி. இவர் கடந்த மாதம் தனியார் தொலைக்காட்சி பாட்டு போட்டியில் கலந்து கொண்டு பாடலை பாடி அனைவரையும் கவர்ந்தார். அப்போது பள்ளிக்கு சென்று படிப்பதற்கு அம்மணம்பாக்கம் அனந்தமங்கலம் வரையிலான போக்குவரத்து வசதியினை ஏற்படுத்தித் தருமாறு அந்நிகழ்ச்சியின் வாயிலாக தமிழக அரசிடம் கோரிக்கையாக கேட்டுக்கொண்டார்.

இது குறித்து தகவல் அறிந்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அச்சிறுமியின் கோரிக்கையை ஏற்று உடனடியாக அம்மணம்பாக்கம் அனந்தமங்கலம் வரையிலான இலவச பேருந்து போக்குவரத்து வசதியினை ஏற்படுத்தித் தரும்படி உத்தரவிட்டார். ,இதனைத் தொடர்ந்து போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் இன்று காலை அம்மணம்பாக்கம் அனந்தமங்கலம் வரையிலான இலவச பேருந்து போக்குவரத்து வசதியை சிறுமி தர்ஷினியை முன்னிறுத்தி தொடங்கி வைத்தார்.

அப்போது விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர். சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேதுநாதன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## தமிழகத்தில் அதிமுக ஆட்சியை மீண்டும் அமைத்திடுவோம்
### ஜெயலலிதா நினைவு நாளில் அதிமுகவினர் உறுதிமொழி

சென்னை, நவ.6



"குடும்ப ஆட்சியில் தந்தை, மகன், மருமகன் அதிகாரம் செலுத்தும், போலி திராவிட மாடலின் பொய் முகத்தை அம்பலப்படுத்துவோம்" என மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் நினைவு நாளையொட்டி அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி உள்பட அக்கட்சியினர் உறுதிமொழி ஏற்றனர்.

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 8ம் ஆண்டு நினைவு நாள் இன்று (டிச.5) அனுசரிக்கப்படுகிறது. இந்நிலையில் சென்னை மெரினா கடற்கரையில் உள்ள ஜெயலலிதாவின் நினைவிடத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மலர் வளையம் வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இதனிடையே முன்னாள் முதல்வர், ஜெயலலிதா நினைவு தினத்தை யொட்டி அவர் உறுதி மொழிகளை அறிக்கையாக வெளியிட்டுள்ளார். அந்த உறுதிமொழியில், "தீயசக்தியை விரட்டியடிக்க, குடும்ப ஆட்சியை வீட்டுக்கு அனுப்பிட கழகத்தை நிறுவிய நம் தலைவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் வழியில் அயராது உழைப்போம். கழகம் காக்க, கர்ஜிக்கும் சிங்கமெனத் திகழ்ந்த புரட்சித் தலைவி அம்மாவின் வழியில் திமுக ஆட்சியை, வீட்டுக்கு அனுப்பிட, விண்ணை முட்டும் வீரர்களின், ஆர்ப்பரிப்பைப் பாரீர். பொய்யான வாக்குறுதிகளைத் தந்து, மக்களை ஏமாற்றி வரும், பொம்மை முதல்வர் ஆட்சிக்கு, முடிவு கட்டுவோம்.

குடும்ப ஆட்சியில் தந்தை முதல்வர், மகன் துணை முதல்வர், மருமகன் அதிகாரம் செலுத்தும், போலி திராவிட மாடலின் பொய் முகத்தை அம்பலப்படுத்துவோம். மக்கள் விரோத திமுக ஆட்சியிலே, குடிநீர் கட்டண உயர்வு; கழிவு நீர் வரி உயர்வு, சொத்து வரி உயர்வு, பால் கட்டண உயர்வு, மின் கட்டண உயர்வு, பத்திரப் பதிவில் வழிகாட்டி மதிப்பு உயர்வு, பேருந்து கட்டண மறைமுக உயர்வு, ஏழை, எளிய மக்களின் வயிற்றில் அடிக்கும்,

தந்திர மாடல் ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவோம்.

திமுக ஆட்சியிலே, தொடர் கொலை, கொள்ளை, வழிப்பறிச் சம்பவங்களால் சட்டம்ஒழுங்கு சீர்கெட்டுப் போச்சு! கள்ளச் சாராய மரணங்களால், ஏழை, எளிய மக்களின் குடும்பமே நிர்கதியாய் ஆச்சு. எங்கும் கஞ்சா போதைகளால், தமிழ் நாடே தத்தளித்துப் போச்சு. விடியா திமுக ஆட்சி தேவையா? என்று மக்கள் மனதில் எண்ணம் வந்திருக்கு. மக்கள் விரோத திமுக அரசை, வீட்டுக்கு அனுப்பும் வரை ஓயமாட்டோம்.

திமுக ஆட்சியில், குற்றவாளிகளுக்கு துளியும் பயமில்லை, தொடர் குற்றங்கள், இந்த ஆட்சியில் தொடர்கிறது. இங்கு தமிழகத்தில் ஆட்சி இருக்கிறதா ? இல்லையா? என்கிற கேள்வியை மக்கள் எழுப்பி வருகிறார்கள். தமிழ் நாட்டை, குற்றவாளிகளின் சொர்க்க பூமியாக மாற்றியிருக்கும் திமுக அரசே ராஜினாமா செய்.

அதிமுக ஆட்சியிலே சிறப்பான திட்டங்கள் மக்களுக்கு செழிப்பான திட்டங்கள் ஏழைகள் பசியாற, அம்மா உணவகங்கள் ஏழைகள் நலம் பெறவே, அம்மா மருந்தகங்கள் மாணவர்கள் பயன்பெறவே, மடிக் கணினி திட்டங்கள் தாலிக்குத் தங்கம் என்று, தாய்க்குலம் புகழும் திட்டங்கள் இத்திட்டங்களை நிறுத்திவிட்டால், ஜெயலலிதாவின் புகழை, மறைத்துவிடாலம் என்று தீய சக்தியாளர்கள் நினைக்கின்றார்கள். அவர்களின் கொட்டத்தை அடக்கிடுவோம்.

ஆட்சிக்கு வந்தவுடன், நீட் தேர்வு ரத்தென்றார்! கல்விக் கடன் ரத்தென்றார். விலைவாசி குறையும் என்றார். பொய் முதல்வர் செய்தாரா?. இனிமேலும் தமிழர்களை ஏமாற்ற விடமாட்டோம் என்று உறுதி ஏற்கிறோம். வருகின்ற சட்டமன்றத் தேர்தல் களத்தில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் வழியில் நின்று, வென்று காட்டுவோம். தமிழகத்தில் கழக ஆட்சியை மீண்டும் அமைத்திடுவோம்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



புயல் கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் பகுதியில் பொதுமக்களுக்கு தமிழக அரசின் ரூபாய் . 2000. நிவாரண உதவித்தொகையினை அமைச்சர் க பொன்முடி வழங்கினார் உடன் ஆட்சியர் எம்.எஸ். பிரசாந்த் சார் ஆட்சியர் ஆனந்தகுமார் சிங் கூட்டுறவுத்துறை இணை பதிவாளர் முருகேசன் ,நகரமன்ற தலைவர் ஜி.ழி.முருகன் உடன் குணா, ஆனையர் திவ்யா ஆகியோர் கலந்து கொண்டனர்..



வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, பொய்கை கிராமம், தேசிய நெடுஞ்சாலை சமத்துவபுரம் அருகில் வாத்துகோழி ஏற்றி வந்த வாகனம் சாலை விபத்துக்குள்ளாகி சம்பவ இடத்திலேயே இருவர் பலி. இதுகுறித்து விபத்து ஏற்பட்ட இடத்தில் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மதிவாணன், வட்டார போக்குவரத்து அலுவலர் சம்பத்குமார், நெடுஞ்சாலைத்துறை செயற்பொறியாளர் ஜெயக்குமார், வேலூர் வருவாய் கோட்டாட்சியர் இரா. பாலசுப்பிரமணியன் துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

# ஈரோடு நந்தா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நாள்பட்ட நுரையீரல் நோய் தடுப்பு தினம்

ஈரோடு டிச-6

ஈரோடு மாவட்டம் பெருந்துறை ரோட்டில் உள்ள நந்தா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் "உங்கள் நுரையீரல் செயல்பாடுகளை அறிந்துக் கொள்ளுங்கள்" என்கிற கருப்பொருளின் அடிப்படையில் உலக நாள்பட்ட நுரையீரல் நோய் தடுப்பு தினம் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.




ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு ஈரோடு அரசு மருத்துவக் கல்லூயின் சுவாச மருத்துவத் துறை தலைவரும், பேராசிரியருமான மருத்துவர் ஆர்.சரவணக்குமார், ஈரோடு மெடிக்கல் சென்டரின் மூத்த ஆலோசகர் நுரையீரல் நிபுணர் மருத்துவர் எஸ். கணேஷ சுப்பிரமணியன் மற்றும் ஈரோடு டிரஸ்ட் மருத்துவமனையின் மூத்த ஆலோசகர் ஓய்வபெற்ற நுரையீரல் நிபுணர் ஏ.ராஜசேகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துக் கொண்டு நாள்பட்ட நுரையீரல் நோய் உருவாகுவதற்கான காரணங்கள் மற்றும் அதன் அறிகுறிகளை பல்வேறு உதாரணங்களுடன் விளக்கம் அளித்தார்கள்.

மேலும் இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் புலமுதல்வர் போராசிரியர் மருத்துவர் சந்திரபோஸ் மற்றும் மருத்துவமனை கண்காணிப்பாளர் மருத்துவர் வி.சுந்திரவேல் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். முன்னதாக நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளரும், சுவாச மருத்துவத் துறை உதவி பேராசிரியருமான மருத்துவர் எஸ்.சரண்யா சிறப்பு விருந்தினர்கள் மற்றும் மாணவர்களை வரவேற்று பேசினார்.

இதனை தொடர்ந்து, ஈரோடு அரசு மருத்துவமனையின் ஆலோசகர் நுரையீரல் நிபுணர் மருத்துவர் ஏ.எஸ். அடைக்கலவன், ஈரோடு லோட்டஸ் மருத்துவமனையின் நுரையீரல் நிபுணர் மருத்துவர் எம்.எஸ். சக்திவேல் ஆகியோர் புகைப்பிடிப்பதனை நிறுத்துவதன் மூலம் நுரையீரலுக்கு மறுவாழ்வு கொடுப்பது குறித்தும், மருத்துவர் என். சத்யா மற்றும் மருத்துவர் கே.பி. ரேஷ்மா ஆகியோர் பல்வேறு இன்ஹெலர்களின் பயன்பாடு, நுரையீரல் செயல்பாடுகளை சோதித்தல் மற்றும் ஆக்ஸிஜனை வினியோக்கும் உபகரணங்கள் பற்றிய தகவல் ஆதாரங்களை காணொலி காட்சி மூலமாக மாணவர்களுக்கு விவரித்தார்கள்.


இவர்களுடன் நந்தா மருத்துவக் கல்லூரியின் சுவாச மருத்துவத் துறை உதவி பேராசிரியர் மருத்துவர் எஸ். சரண்யா நாள்பட்ட நுரையீரல் நோய் தடுப்பு மேலாண்மையினைப் பற்றி விவரித்தார்.

நிகழ்ச்சியின் முடிவில், உதவி பேராசிரியர் மருத்துவர் என். சத்யா அனைத்து வகையான நோய்களுக்கான சிகிச்சைகள் எங்களது கல்லூரின் மூலமாக மிக குறைந்த கட்டணத்தில் வழங்கிவருதாக கூறி நன்றியுரை ஆற்றினார். நிகழ்ச்சியினை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்த புலமுதல்வர். கண்காணிப்பாளர் மற்றும் பேராசிரியர்களையும் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் செயலர் எஸ்.நந்தகுமார் பிரதீப், நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர் எஸ்.திருமூர்த்தி மற்றும் நிர்வாக அலுவலர் முனைவர் ஜேம்ஸ் ஆகியோர் பாராட்டினார்கள். நிகழ்ச்சியில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# சிவகங்கை நகராட்சி இந்திரா நகர் பகுதியில் புதிய பூங்காவினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கென திறந்து வைத்த அமைச்சர்

சிவகங்கை டிச.6





சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட இந்திரா நகர் பகுதியில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தலைமையில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள புதிய பூங்காவினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கென திறந்து வைத்து தெரிவிக்கையில்,

சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:26 மற்றும் 27 ஆகியவைகளை உள்ளடக்கிய இந்திரா நகர் பகுதியில், 2024-2025ம் நிதியாண்டில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 864 சதுர மீட்டர் பரப்பளவில், ரூ.37.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பூங்கா அமைக்கும் பணி சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முழுவதும் முடிவுற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கென இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவானது, வார்டு எண் 26 மற்றும் 27ல் குடியிருக்கும் சுமார் 3,500 பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில், அனைத்து பொழுதுபோக்கு மற்றும் உடற்பயிற்சி மேற்கொள்ளும் வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பூங்காவினை இப்பகுதியைச் சார்ந்த பொதுமக்கள் அனைவரும் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்வதுடன், சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பேணிக்காப்பது ஒவ்வொருவரின் கடமையாகும். இதுதவிர, பொதுமக்கள் தங்களது பகுதிகளில் மேற்கொள்ள வேண்டிய கூடுதல் பணிகள் குறித்து,தங்களது பகுதிகளுக்குட்பட்ட மக்கள் பிரதிநிதிகள் வாயிலாகவோ அல்லது என்னிடம் நேரிலோ மனுக்களாக வழங்கிடும் பொருட்டு, அக்கோரிக்கையின் மீது தனி கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்படும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன்தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சிவகங்கை நகர் மன்றத்தலைவர் சி.எம். துரைஆனந்த், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கை மாறன், சிவகங்கை நகராட்சி ஆணையாளர் கிருஷ்ணராம், நகர்மன்ற துணைத்தலைவர் கார்கண்ணன், நகராட்சி பொறியாளர் முத்து, 26-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் மதியழகன் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண் டனர்.

# வேலூரில், 400 ஆண்டுக்குபிறகு திருஅண்ணாமலையார் திருக்குடை வைபோக விழா மற்றும் ஊர்வலம்



வேலூர் டிச.6

வேலூர் மாவட்டம், வேலூர், கலாசிபாளையம், வளையல்கார தெரு, ஸ்ரீ ருக்மாயி சமேத ஸ்ரீமத் பாண்டுரங்கநாத சுவாமி கோயிலிலிருந்து 400 ஆண்டுக்குபிறகு சிவஜன சக்தி நடத்தும் 5ம் ஆண்டு திருஅண்ணாமலையார் திருக்குடை வைபோக விழா மற்றும் ஊர்வலம் சிவ ஜன சக்தி அமைப்பின் மாநில அமைப்பு தலைவர் ஐ.அசோக் தலைமையிலும், மாநிலச் செயலாளர் ஆர்.ரவிக்குமார், மாநில கௌரவத் தலைவர் டி.கே.பாபு மற்றும் வேலூர் மாவட்டத் தலைவர் டி.லோகநாதன் ஆகியோர் முன்னிலையில் திருக்குடை ஊர்வலம் சிறப்பு பூஜைகளுடன் மேளதாளத்துடன் துவங்கியது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக மாமன்ற உறுப்பினர் கங்கா நாயக், ஸ்ரீல ஸ்ரீ ஆதி அகோரி பீடம் ஸ்ரீ குமரேசன் சுவாமிகள் மற்றும் அருள்மிகு ஸ்ரீ அஷ்ட பூஜை காளி பிடாதிபதி ஸ்ரீ அருண் சுவாமிகள் கலந்துகொணடு சிறப்பு பூஜைகள் செய்து திருக்குடை ஊர்வலத்தை துவக்கி வைத்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியில் விழா குழுவினர்கள்,நிர்வாகிகள், உறுப்பினர்கள் பொதுமக்கள் பக்தர்கள் என பலர் கலந்து கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்து திருக்குடை ஊர்வலம் கோளாகாலமாக நடைபெற்றது.

இந்நிகழ்வு ஸ்ரீ ருக்மாயி சமேத ஸ்ரீமத் பாண்டுரங்கநாத பஜனை கோயிலிலிருந்து வேலூர் கோட்டை ஸ்ரீ ஜலகண்டாஸ்வரர் ஆலயத்திற்கு சென்று சிறப்பு பூஜைகள் செய்து அங்கிருந்து இரண்டு திருக்குடைகள் புறப்பட்டு திருஅண்ணாமலையார் கோயிலுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றனர்.



திருப்பூர் மாவட்டம் திருப்பூர் மாநகராட்சி மண்டலம்1,15 வேலப்பாளையம் மண்டல அலுவலகத்தில் மாநகராட்சி ஆணையாளர் எஸ் .ராமமூர்த்தி தலைமையில் சொத்து வரி, குடிநீர் வரி, பாதாள சாக்கடை வரி, ஆகிய வரி வசூலிப்பு சம்பந்தமான வருவாய் பிரிவு அலுவலர்கள் மற்றும் மதகு, திறப்பாளர்கள் ஆகியோருடன் கடந்த செவ்வாய்க்கிழமை அன்று ஆய்வு கூட்டம் நடைபெற்றது இந்நிகழ்வில் துணை ஆணையாளர் சுந்தர்ராஜன் உதவி ஆணையாளர் (வருவாய்) எஸ்.கணேஷ்குமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்..

# மானாமதுரையில் நடந்த ஓவியப் போட்டியில் வெற்றி மாணவர்களுக்கு பரிசு வழங்கல்

மானாமதுரை டிச.6



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பாபா மெட்ரிக் பள்ளியில் கடந்த வருடம் கார்த்திக் வித்யாலயா மேல்நிலைப்பள்ளி பள்ளியின் தாளாளர் புதல்வி பி.கே. அகஸ்தி என்ற 12 வயது குழந்தை குண்டான் சட்டி என்ற (3ஞி) அனிமேஷன் திரைப்படத்தை வெளியிட்டார்.

அந்த திரைப்படம் குழுவினர் நடத்திய மாநில அளவிளான குண்டான் சட்டி ஓவியப் போட்டியில் பாபா மெட்ரிக் பள்ளியின் மாணவ,மாணவிகளும் பெருந்திரளாக கலந்து கொண்டு போட்டியில் முதல் மூன்று இடங்களை பிடித்துள்ளனர்.

வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பாபா மெட்ரிக் பள்ளி தாளாளர் கபிலன், நிறுவனர் இராஜேஸ்வரி மற்றும் ஆட்சியர் மீனாட்சி பரிசுகள் மற்றும் சான்றிதழ் மற்றும் கேடயமும் வழங்கினார்கள்.

பள்ளியின் முதல்வர் சாரதா மற்றும் ஆசிரிய பெருமக்கள் அனைவரும் ஒன்று இணைந்து வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# வேலூர் எஸ்.பி. மதிவாணன் தலைமையில் சம்பந்தப்பட்ட அனைத்து துறையினருடன் குற்ற கலந்தாய்வுக் கூட்டம்

வேலூர் டிச.6





வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட காவல் அலுவலகத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நா.மதிவாணன் தலைமையில் மாதாந்திர குற்ற கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கடந்த மாதம் மாவட்டம் முழுவதும் நடைபெற்ற குற்றங்கள் குறித்தும், நிலுவையிலுள்ள குற்ற வழக்குகளை விரைந்து முடிக்கவும், சரித்திர பதிவேடு குற்றவாளிகள் மற்றும் வழக்கமான குற்றவாளிகளை தொடர்ந்து கண்காணிக்கவும், ரவுடிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும், கொலை, கொள்ளை, லாட்டரி, சூதாட்டம் மற்றும் மணல் திருட்டு போன்ற குற்றங்களை முழுமையாக தடுக்க குற்றவாளிகள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், தொடர் குற்ற செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளை குண்டர் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் அடைக்கப்பட வேண்டும் எனவும், மதுவிலக்கு சம்பந்தமாக தீவிரமாக சோதனை மேற்கொண்டு கட்டுப்படுத்தப்பட்ட நிலையில், கஞ்சா மற்றும் பல்வேறு வகை போதைப்பொருட்கள் கடத்தல் மற்றும் பயன்பாட்டை தடுக்க மாவட்டம் முழுவதும் பள்ளி, கல்லூரிகள் அருகே உள்ள கடைகளில் சோதனையை தீவிரப்படுத்துவதோடு,

பள்ளி, கல்லூரிகளில் மாணவர்களுக்கு போதைப்பொருட்களினால் ஏற்படும் விளைவுகளை பற்றி விளக்கி விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட வேண்டுமெனவும், மாவட்டம் முழுவதும் வாகன தணிக்கையை தீவிரப்படுத்த வேண்டுமெனவும், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள், முக்கிய சந்திப்புகள், ஏ.டி.எம். மையங்கள் மற்றும் நகைக்கடைகள் உள்ள பகுதிகளில் சிசிடிவி கேமராக்களை அதிகப்படுத்துவதோடு பகல் மற்றும் இரவு ரோந்து அதிகாரிகள் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் எனவும், சாலைகளில் முறைகேடாக மற்றும் சாலை விதிகள் மீறி வாகனங்களை இயக்குபவர்களின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், சைபர் க்ரைம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் குறித்தும், SC/ST வழக்குகள் குறித்தும், காவல் நிலையங்களில் பெறப்படும் புகார்களுக்கு விரைந்து CSR/FIR பதிவு செய்யப்பட வேண்டுமெனவும், மனுதாரர்களிடம் கனிவாக நடந்து கொள்ள வேண்டுமெனவும், இனிவரும் காலங்களில் குற்றங்கள் மற்றும் விபத்துகள் நடைபெறாத வண்ணம் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகள்

குறித்தும் ஆலோசிக்கப் பட்டது. இக்கூட்டத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர், துணை காவல் கண்காணிப்பாளர்கள், காவல்துறை அதிகாரிகள், சிறைத்துறை அதிகாரிகள், வனத்துறை அதிகாரிகள், மருத்துவர்கள், துணை அரசு வழக்குறைஞர் மற்றும் உணவுபாதுகாப்புதுறை அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடியில். மாநகராட்சிக்கு உட்பட்ட வடக்கு மண்டல அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற முகாமினை மேயர் ஜெகன் பெரியசாமி தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். உடன் மாநகராட்சி ஆணையர் மதுபாலன் துணை மேயர் ஜெனிட்டா , பகுதி கழக செயலாளரும் மண்டல தலைவருமான நிர்மல்ராஜ் மாமன்ற உறுப்பினர்கள் ரெங்கசாமி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்படி தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வடக்கு மண்டல அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற முகாமினை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினோம். உடன் மாநகராட்சி ஆணையர் மதுபாலன், துணை மேயர் ஜெனிட்டா பகுதி கழக செயலாளரும் மண்டல தலைவருமான நிர்மல்ராஜ் மாமன்ற உறுப்பினர்கள் ரெங்கசாமி ஜெயசீலி கர்ப்பகனி தெய்வேந்திரன், அந்தோணி, மார்ஷலின், நாகேஸ்வரி, மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள். கலந்து கொண்டனர்.

# கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இராமநதியில் இருந்து சாகுபடிக்காக தண்ணீர் திறந்து வைத்த மாவட்ட ஆட்சியர்

தென்காசி டிச.6

தென்காசி மாவட்டம் தென்காசி வட்டம் கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இராமநதியில் இருந்து பிசான பருவ சாகுபடிக்கு ஏ.கே. கமல்கிஷோர், நேற்று தண்ணீர் திறந்து வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்ததாவது, இராமநதி பாசன திட்டத்தின் கீழுள்ள வடகால், தென்கால் மற்றும் பாப்பான்கால் மற்றும் புதுக்கால் ஆகிய கால்வாய்களின் கீழ் பாசனம் பெறும் 4943.51 ஏக்கர் நேரடி மற்றும் மறைமுக பாசன நிலங்களுக்கு நடப்பாண்டு பிசான பருவ சாகுபடிக்கு இராமநதி நீர்த் தேக்கத்திலிருந்து 05.12.2024 முதல் 31.03.2025 வரை 117 நாட்களுக்கு வினாடிக்கு 60 கன அடி வீதம் மொத்தம் 823.92 மி.க.அடிக்கு மிகாமல் நீர் இருப்பை பொறுத்து தண்ணீர் திறந்து விடப்படும்.





இதன் மூலம் தெற்கு கடையம், மேலக்கடையம், கோவிந்தப்பேரி, ஆழ்வார் குறிச்சி, வாகைக்குளம், அயன் பொட்டல்புதூர், பொட்டல்புதூர், பாப்பான்குளம், ரவணசமுத்திரம், பாப்பான்குளம், துப்பாக்குடி, இடைகால் ஆகிய கிராமங்கள் பயன்பெறும். எதிர் வரும் நாட்களில் வடகிழக்கு பருவ மழையினால் மேலும் அணையில் நீர்வரத்து அதிகரிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் நீர்த்தேக்கத்தில் எதிர் வரும் நாட்களில் பருவமழை பொய்த்து எதிர் பார்க்கின்ற நீர்வரத்து கிடைக்கப் பெறவில்லையென்றால், இருக்கும் நீரை அனுமதிக்கப்பட்ட பாசன நிலங்கள் முழுமைக்கும் பயன்பெறும் வகையில் சுழற்சி முறையில் வழங்கப்படும் எனவும், நீரை சிக்கனமாக பயன்படுத்தவும், நீர்விநியோகப் பணியில் நீர்வளத்துறைக்கு ஒத்துழைப்புத் தருமாறும் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், கேட்டு கொண்டுள்ளார். இந்நிகழ்ச்சியில், சிற்றாறு வடிநிலக்கோட்டம் செயற் பொறியாளர் தனலெட்சுமி (நீர்வளம் ஆதாரத்துறை), உதவி பொறியாளர்கள் அந்தோணி ராஜ், செந்தில்குமார் (நீர்வளம் ஆதாரத் துறை), செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் இரா. சண்முக சுந்தரம் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) ரா.ராமசுப்பிர மணியன், அலுவலர்கள் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# பழனியில் வான்மார்ட் இயற்கை அங்காடி திறப்பு விழா

பழனி டிச.6

திண்டுக்கல் மாவட்டம் பழனி இரயில்வே சாலையில் வான்மார்ட் இயற்கை அங்காடி திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றன.





தொடர்ந்து இந்நிகழ்வில் பழனி மாவட்ட அனைத்து வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மாவட்ட தலைவர் ஜே.பி. சரவணன் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் கந்த விலாஸ் பாஸ்கரன் வள்ளுவர் தியேட்டர் செந்தில்குமார் நம்பிக்கை சிறகுகள் அறக்கட்டளையின் மாநில தலைவர் ரமேஷ் மாரிமுத்து, ஆறுமுகம், அம்பாள் ராம்குமார், மடத்துக்குளம் சக்திவேல், யோகா சோமசுந்தரம், மானூர் காளிமுத்து, தண்டபாணி, மற்றும் நம்பிக்கை சிறகுகள் அறக்கட்டளை நிர்வாகிகள் உறுப்பினர்கள் மகளிர் அணி நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டு இயற்கை அங்காடி திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றன. இந்நிறுவனத்தில் பாரம்பரியத்தை போற்றும் விதமாக மரச்செக்கு எண்ணெய் பாரம்பரிய அரிசி வகைகள், பருப்பு வகைகள், தானிய வகைகள் ஆகியவை விற்பனைக்கு வைத்துள்ளனர்.

மேலும் மனித உடலை பாதுகாக்கும் வகையில் பல்வேறு ஊட்டச்சத்துக்கள் நிறைந்த பாரம்பரிய உணவு பயிர் வகைகள் வான்மார்ட் இயற்கை அங்காடியில் விற்பனைக்காக வைக்கப் பட்டிருந்தனர்..

# சோழிங்கநல்லூர் தொகுதி 196 வட்ட தி.மு.க சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா

சோழிங்கநல்லூர் டிச.6

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 196 வது வட்டம், கண்ணகி நகரில் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் ஆணைக்கிணங்க , சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச. அரவிந்த் ரமேஷ் ஆலோசனைப்படி, நவம்பர் 27-ல் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு உதயநிதியின் உதய நாள் விழாவில் திமுக அரசின் சாதனைகளை விளக்கி பொதுக்கூட்டம் மாலை 6 மணிக்கு கண்ணகி நகரில் 196 - அ வட்டக் கழகச் செயலாளர் பி. என். ஜோதி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.





விழாவில் தலைமை கழக பேச்சாளர் குடியாத்தம் கோடீஸ்வரன், இளம் பேச்சாளர் செ. நந்தகோபால் மற்றும் மாவட்ட, ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் இளையான்குடி பஜாரில் அதிமுக நகர செயலாளர் நாகூர் மீரா தலைமையில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 8ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் இளையான்குடி பேரூர்கழக நிர்வாகிகள் மீரான்கனி, தாஜ்மைதீன், செய்யது இபுறாகிம், அபுல்கலாம் ஆசாத், அப்பாஸ்அலி, இபுறாம்சா, குமார், செல்வம், மீராஉசேன், பூட்டுஅப்தாகீர், மைதீன், பீர்முகம்மது, போஸ், அப்துல்ரஜாக், அயூப்கான், ஆறுமுகம், செய்யது அன்சாரி, சபீர்முகம்மது, யாசர்அலி, ஹம்சா சிக்கந்தர், நாசர், தெய்வேந்திரன், அலிஅக்பர், காளீஸ்வரி, இஸ்மத்இனூன், ஜாகிர்உசேன், அரசேந்திரன் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்

# ஃபெஞ்சல் புயலினால் பாதிக்கப்பட்டுள்ள விழுப்புரம் பொதுமக்களுக்கு ரூ.24 இலட்சம் மதிப்பீட்டிலான நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்த அமைச்சர்

சிவகங்கை டிச.6

ஃபெஞ்சல் புயலினால் பாதிக்கப்பட்டுள்ள விழுப்புரம் மாவட்டத்தை சார்ந்த பொதுமக்களுக்கு உதவிடும் வகையில், சிவகங்கை மாவட்டத்தின் சார்பில் முதற்கட்டமாக ரூ.24.00 இலட்சம் மதிப்பீட்டிலான நிவாரணப் பொருட்களை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் கனரக வாகனங்களில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் அனுப்பி வைத்தார்.



சிவகங்கை மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் . பெரியகருப்பன் , ஃபெஞ்சல் புயலினால் பாதிக்கப்பட்டுள்ள விழுப்புரம் மாவட்டத்தை சார்ந்த பொதுமக்களுக்கு உதவிடும் வகையில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில், மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தலைமையில், கடந்த (04.12.2024) சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்திலிருந்து முதற்கட்டமாக நிவாரணப் பொருட்களை கனரக வாகனங்கள் மூலம் அனுப்பி வைத்து தெரிவிக்கையில்,

ஃபெஞ்சல் புயலினால் கடந்த சில தினங்களுக்கு முன்பு, சென்னைக்கு அருகிலுள்ள சில மாவட்டங்களைச் சார்ந்த பொதுமக்கள் பாதிப்புக்குள்ளாகினர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, போர்க்கால அடிப்படையில் அனைத்து சீரமைப்பு பணிகளும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு, மேற்கண்ட பகுதிகளை சார்ந்த பொதுமக்கள் தற்போது இயல்பு நிலைக்கு திரும்பி வருகின்றனர்.

மேலும், அம்மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை சீர் செய்வதற்கு, அரசுடன் இணைந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள பொதுமக்கள் மற்றும் தன்னார்வலர்களும் தங்களது பங்களிப்பினை ஏற்படுத்தி வருகின்றனர். அந்தவகையில், சிவகங்கை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் கனரக வாகனங்கள் மூலம் பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களான

அரிசி 5 கிலோ, துவரம் பருப்பு - 1 கிலோ, சர்க்கரை - 1 கிலோ, சமையல் எண்ணெய் - 1 லிட்டர், உப்பு 1 கிலோ, மிளகாய்த்தூள், மல்லித்தூள், சாம்பார் தூள், ரசப்பொடி, கடுகு, சீரகம், மிளகு, வெந்தயம், மஞ்சள் தூள், டீ தூள் ஆகியவைகள் தலா 100 கிராம், காபி தூள் 2 பாக்கெட், கோதுமை மாவு - 1 கிலோ, புளி லு கிலோ, தீப்பெட்டி - 1 பாக்கெட் என மொத்தம் 19 வகையான நிவாரணப் பொருட்கள் என தலா ரூ.1,200/ வீதம் முதற்கட்டமாக 2,000 குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.24.00 இலட்சம் மதிப்பீட்டில் சிவகங்கை மாவட்டத்தின் மூலம் விழுப்புரம் மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதைத் தொடர்ந்து, அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் வாயிலாகவும், பொதுமக்கள், தன்னார்வலர்கள், நன்கொடையாளர்கள் ஆகியோர்களின் பங்களிப்புடனும் நிவாரணப் பொருட்கள் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுபோன்று, அரசுடன் இணைந்து நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு அனைத்து தரப்பினரும் உறுதுணையாக இருந்திட வேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) கா.வானதி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) கேசவதாசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் செயற் பொறியாளர் அனுராதா, திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பங்களாதேஷில் இந்துக்கள் தாக்கப்படுவதை கண்டித்து ஈரோட்டில் தடையை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 107 பேர் கைது

ஈரோடு, டிச.6

ஈரோட்டில்-பங்களாதேஷ் நாட்டில் இந்துக்கள் தாக்கப்படுவதை கண்டித்தும், ஒன்றிய அரசு நடவடிக்கை கோரி தடையை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 107 பேரை பேோலீசார் கைது செய்தனர்.

பங்களாதேஷ் நாட்டில் இந்துக்கள் தாக்கப்படுவதை கண்டித்தும், அங்குள்ள இந்து மக்களை காத்திட ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி நேற்று வங்கதேச இந்து உரிமை மீட்புக்குழு சார்பில் ஈரோடு வீரப்பன் சத்திரம் பஸ் ஸ்டாப்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என அறிவித்திருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு போலீசார் அனுமதி தர வில்லை. இந்நிலையில், தடையை மீறி பங்களாதேஷ் இந்துக்களை பாதுகாக்க கோரி ஈரோடு வீரப்பன் சத்திரத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து ஈரோடு டவுன் டிஎஸ்பி முத்துக்குமரன், இன்ஸ்பெக்டர் செந்தில்பிரபு தலைமையிலான போலீசார் அவர்களை தடுத்து நிறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 22 பெண்கள் உட்பட 107





பேரை போலீசார் கைது செய்து, வேனில் ஏற்றி பஸ் ஸ்டாண்ட் அருகே உள்ள தனியார் மண்டபத்தில் அடைத்தனர். ,இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

மாலை தந்தி



# முடிச்சூர் பகுதி சார்பில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 8ஆம் ஆண்டு நினைவு தினம்





செங்கல்பட்டு டிச.6

செங்கல்பட்டு மாவட்டம் அதிமுக பொதுச் செயலாளர் முன்னாள் முதலமைச்சர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி யார் ஆணைக்கிணங்க செங்கல்பட்டு மாவட்டம் மேற்கு மாவட்ட செயலாளர் சிட்லபாக்கம் ச.இராஜேந்திரன் வழிகாட்டுதலின்படி இதய தெய்வம் புரட்சித்தலைவி ஜெயலலிதா 8 ஆண்டு நினைவு அஞ்சலி முன்னிட்டு முடிச்சூர் ஸ்ரீ பாஸ்கர் ஏற்பாட்டில் இந்நிகழ்ச்சியில் கணேசன், ராஜேந்திரன், தவமணி, தாஸ், மூர்த்தி, கலை, சரவணன், இ.டி.முருகன், ரமேஷ், சர்குணம், மூர்த்தி, சிவா, ராஜன், மணி, புவனேஸ்வரி, கற்பகம், விஜயராணி, மஞ்சு அருணாச்சலம் மற்றும் முடிச்சூர் கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு மரியாதை செய்தனர்..

# வேலூர் பில்டர் பெட் சாலையில் சுதாகர் பல் மருத்துவமனை திறப்பு



வேலூர் டிச6

வேலூர் மாவட்டம், வேலூர் பில்டர் பெட் சாலையில், சுதாகர் பல் மருத்துவமனை திறப்பு விழா, பல் மருத்துவமனை நிறுவனர் சுதாகர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக வி.ஐ.டி துணைத் தலைவர் ஜி.வி.செல்வம் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்து, குத்துவிளக்கேற்றி, திறப்பு விழாவை சிறப்பித்தனர். கௌரவ விருந்தினராக முன்னாள் அமைச்சர் வி.எஸ்.விஜய் மற்றும் பலர் கலந்து கொண்டு திறப்பு விழாவை சிறப்பித்து வாழ்த்து தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து நிறுவனர் சுதாகர் அனைவருக்கும் பொன்னாடை போர்த்தி கௌரவித்து சிறப்பு செய்யப்பட்டது.



திண்டுக்கல் மாவட்டம் பழனியில் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளரும் மண்டல பொறுப்பாளரும் கேபி நல்லிசாமி ஆணைக்கிணங்க நேற்று பழனி பேருந்து நிலையத்தின் அருகே அம்மாவின் எட்டாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு. பழனி ஒன்றிய செயலாளர் தினேஷ் குமார் நகரச் செயலாளர் அறிவழகன் மற்றும் மாவட்ட. நகர.ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டு திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்..




சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் இயங்கி வரும் குளோபல் பல்நோக்கு மருத்துவமனையின் பங்குதாரர் கோடீஸ்வரர் மருந்தகம் உரிமையாளர் விவேகானந்தம் பிறந்த நாளை முன்னிட்டு மருத்துவமனை வளாகத்தில் கேக் வெட்டி கொண்டாடினர். புகழ் பெற்ற அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் செந்தில், குளோபல் மருத்துவமனைக்கு உறுதுணையான மருத்துவரும் மேலாளருமான பாலாஜி மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டு கோடீஸ்வரா என்ற விவேகானந்தனை பொன்னாடை அணிவித்து வாழ்த்தினர்.

# வேலூர் திருப்பத்தூர் ஆகிய ஆட்சியர்கள் தலைமையில் தடுப்பணைகள் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டு விழா

வேலூர் டிச6

வேலூர் மாவட்டம். குடியாத்தம் தாலுகா, தாழையாத்தம் மற்றும் சுண்ணாம்புபேட்டை இடையே ரூ.18.41 கோடி மதிப்பீட்டில் கௌண்டன்ய மகாநதியின் குறுக்கே தரைப்பாலம் அமைக்கும் பணி, திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம் கதவாளம் அருகே கானாற்றின் குறுக்கே ரூ.6 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி மற்றும் வெள்ளக்கல் அருகே கானாற்றின் குறுக்கே ரூ4 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணிகளுக்கு நீர்வளத் துறை





அமைச்சர் துரைமுருகன் பூமி பூஜை செய்து அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் தர்ப்பராஜ், சட்ட மன்ற உறுப்பினர்கள் நந்த குமார், தேவராஜி, அமுலு, வில்வநாதன் மக்கள் பிரதிநிதிகள், மேல்பாலாறு வடிநில கோட்ட கண்காணிப்பு பொறியாளர் ரமேஷ், செயற்பொறியாளர் பிரபாகரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வளாகத்தில் உலக எய்ட்ஸ் தினம் முன்னிட்டு மாணவ மாணவிகள் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ. சங்கீதா கொடி அசைத்து தொடங்கி வைத்தார். இந்தப் பேரணியில் கலந்து கொண்டோர் மதுரையின் முக்கிய வீதிகளின் வலியாக வலம் வந்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

# கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் மக்கள் குறை தீர்க்கும் நாள் விசாரணை

கன்னியாகுமரி டிச6

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுந்தரவதனம் தலைமையில் பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் மாவட்ட காவல் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பொதுமக்களின் மனுக்கள் மீது நேரடியாக விசாரணை மேற்கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.




இக்கூட்டத்தில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்ற தடுப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மதியழகன், நாகர்கோவில் உட்கோட்ட உதவி காவல் கண்காணிப்பாளர் லலித்குமார் பயிற்சி உதவி காவல் கண் காணிப்பாளர் ரேகா மீனா துணை காவல் கண்காணிப்பாளர்கள் மகேஷ் குமார், பார்த்திபன், நல்லசிவம், சந்திரசேகர், காவல் ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு மனுக்களின் மீது விசாரணை நடத்தி தீர்வு கண்டனர்.

# தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில், மாவட்டத்திலுள்ள சிறுபான்மையினர்களுடனான கலந்துரையாடல் கூட்டம்

தென்காசி டிச6

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில், தென்காசி மாவட்டத்திலுள்ள சிறுபான்மையினர்களுடனான கலந்துரையாடல் கூட்டம் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் அருட்தந்தை சொ.ஜோ அருண் சே.ச., தலைமையில் நடைபெற்றது.



தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில், தென்காசி மாவட்டத்திலுள்ள சிறுபான்மையினர்களுடனான கலந்துரையாடல் கூட்டம் மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல் கிஷோர்., தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய துணைத் தலைவர் எம்.எம்.அப்துல்குத்தூஸ் (எ) இறையன்பன்குத்தூஸ் அரசு கூடுதல் செயலாளர் / பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முனைவர் சீ.சுரேஷ்குமார், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர்கள் ஹேமில்டன் வில்சன் சொர்ணராஜ் நாகூர் கி.பி.நஸிமுதீன் பிரவீன்குமார் டாட்டியா ராஜேந்திர பிரசாத் ஜே.முகமதுரஃபீ, எஸ்.வசந்த் ஆகியோர் முன்னிலையில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் அருட்தந்தை சொ.ஜோ அருண் சே.ச., தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் அருட்தந்தை சொ.ஜோஅருண் சே.ச, தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையம், சிறுபான்மையினருக்காக அரசின் சார்பில் செயல்படுத்தப்படுகின்ற சிறப்பு திட்டங்கள் குறித்து தெரிந்து கொள்வதற்காகவும், அவை முறையாக சிறுபான்மையின மக்களை சென்று அடைகிறதா என்றும், அனைத்துத்தரப்பு சிறுபான்மையின மக்கள் பாதுகாக்கப்படுகிறார்களா என்பது குறித்து ஆய்வு செய்ய தென்காசி மாவட்டத்திற்கு இக்குழு வருகைதந்துள்ளது.

தென்காசி மாவட்டத்தில் இன்றைய தினம் சிறுபான்மையின அமைப்பை சார்ந்த தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கிறித்தவர்களின் பயன்பாட்டிற்காக கல்லறைதோட்டம் அமைத்தல் மற்றும் முஸ்லிம்களின் பயன்பாட்டிற்காக கபர்ஸ்தான் அமைத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் கல்லறை தோட்டங்கள், கபர்ஸ்தானங்களுக்கு சுற்றுச்சுவர் மற்றும் நடைபாதை ஏற்படுத்தி அதில், பேவர் பிளாக் அமைத்து தருதல் போன்ற கோரிக்கைகளுக்கு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த ஆணையத்தில் சிறுபான்மையின மக்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் வழங்கிய கோரிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் நேரடியாக விசாரணை செய்து அறிக்கைகளை இந்த ஆணையம் பெற்று, தீர்வு காணும் வகையில் செயல்பட்டு வருகிறது, தகுதியுடைய கோரிக்கைகள் அனைத்தும் அன்றையதினமே தீர்வு காணப்பட்டு வருகிறது. நீண்ட நாட்கள் நிலுவையிலுள்ள கோரிக்கைகளை தமிழ்நாடு அரசின் கவனத்திற்கு எடுத்துச்செல்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது என தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நலத் தலைவர் அருட்தந்தை சொ.ஜோ அருண் சே.ச. தெரிவித்தார்.

முன்னதாக, தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் மூலம் 03 ஏழை, எளிய கல்லூரி மாணவிகளுக்கு தலா ரூ.10,000/ வீதம் ரூ.30,000/ மதிப்பிலான கல்வி உதவித் தொகையினையும், 07 பயனாளிகளுக்கு தலா 10,000/ வீதம் ரூ.70,000/ மதிப்பிலான தொழில் உதவித் தொகையினையும், 10 பயனாளிகளுக்கு தலா ரூ.8,300/ வீதம் ரூ.83,000/ மதிப்பிலான இலவச தையல் இயந்திரங்களையும், 50 பயனாளிகளுக்கு ரூ.69,63,000/ மதிப்பில் டாம்கோ கடன்களையும், 09 பயனாளிகளுக்கு உபதேசியார் நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டைகள் என மொத்தம் 82 பயனாளிகளுக்கு 71,46,000/ மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை தமிழ் நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் அருட் தந்தை சொ.ஜோஅருண் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாசன், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் முத்துராமலிங்கம், தென்காசி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் ஷேக் அப்துல்லா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161